மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம்.
National Association For Humanitarian Rehabilitation Operations
**NAHRO**
KN/DS/SS/NGO/2012/06 NO-20, Kanagapuram, Kilinochchi. E-Mail :- nahrongo@gmail.com

03.11.2014

திரு.S.சதா

லோட்டஸ்.

அன்புடையீர்.

**<u>தையல் கடை தொடர்பானது.</u>**

மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம் தங்களது நிதியுதவியுடன் மேற்கொண்டு வந்த தையல் பயிற்சி வகுப்பானது தையல் பரீட்சைகள் வைக்கப்பட்டு 31.10.2014ம் திகதியுடன் இனிதே நிறைவடைந்துள்ளது. தொடர்ந்து தங்களுடன் ஏற்கனவே நாம் கலந்துரையாடியமைக்கு அமைவாக பயிற்சியினை பெற்று பரீட்சையில் சிறப்பு தேர்ச்சி பெற்ற 06 பயிற்சியாளர்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத்திட்டமான தையல் கடை ஒன்றினை அமைத்துக்கொடுப்பதாயின் கூடுதலான நிதி செலவாகும் என்பதகை கவனத்தில் கொண்டு வாடகைக்கு பல கடைகள் கிளி நகரை அண்டிய பகுதிகளில் ஆராயப்பட்டது. இதற்கமைவாக A9 பிரதான வீதிக்கருகாமையில், கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் தையல் கடைக்கு பொருத்தமானதும், பாதுகாப்பானதும், ஏனைய அடிப்படை வசதிகளையும் கொண்ட கடை ஒன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கடை இரண்டு தொகுதிகளைக் கொண்டது ஒரு கடையின் நீளம் 40அடி இவ்விரண்டு கடைகளையும் நாம் வாடகைக்கு அமர்த்தி ஒரு கடையில் தையல் செயற்பாடுகளையும் மற்றய கடையில் தைத்த உடைகளையும் காட்சிப்படுத்தி விற்பனையும் செய்யலாம் இக்கடையினை மூன்று வருடங்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முற்பணமக 200000.00 ரூபாவும், மாதாந்த வாடகையாக 10000.00 கோரியுள்ளார்கள்.

ஆகவே மேற்படி கடையினை நாம் வாடகைக்கு அமர்தி தையல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான பாதீடு தயாரிக்கப்பட்டு இத்தோடு இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. அப்பாதீட்டினை தங்களின் மேலான கவனத்தில் கொண்டு அதற்கான நிதியுதவிகளை வழங்கியுதவினால் இக்கடையில் வைத்தே கண்காட்சியினையும் மேற்கொள்வதோடு மார்கழி மாதம் நாம் திட்டத்தினை ஆரம்பிக்கலாம் என்பதனைவும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி.

திரு.த.குருகுலராஜா

கௌரவ தலைவர்